RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s111

OPEN ACCESS

# பெரியபுராணத்தில் குடும்ப அமைப்பு

**தெ. சந்திரா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி-628008 தமிழ்நாடு, இந்தியா.

# Family Confromation in Periyapuranam

**T. Chandra** [a, *]

[a] Department of Tamil, V.O. Chidambaram College, Thoothukudi – 628008, Tamil Nadu, India

* Corresponding Author: pearl4god@yahoo.co.in

Received: 15-03-2021
Revised: 23-11-2021
Accepted: 24-11-2021
Published: 02-02-2022

Check for updates

**ABSTRACT**

Homelessness is the life of a husband and wife who stay in the eye of the house. The husband and wife should work together for homelessness. It is learnt that women were instrumental in the ups and downs of their husbands in the family structure shown by periyapuranam. It is seen that the husband himself respected the husband's word as a visible deity. He describes how he lived as a good family, husband, wife and children in a life of conception. It is clear from the lives of the Nayanmars that in family life, Shiva charity and hospitality have lived with two eyes.

**Keywords:** Fulfilled life, Seed, Devotees of Siva, Lotus.

## முன்னுரை

இல்லறம் மனித வாழ்வின் தொடக்கநிலையாகும். இல்லறத்தில் கணவன் தலைமையில் மனைவியும், குழந்தைகளும் இயங்குவர். ஒரு சமூகம் உருவாக இல்லறம் அடிப்படையாகிறது. சீரிய குடும்பங்களைக் கொண்ட நாட்டில் சீரிய சமுதாயம் உருவாகின்றது. இல்வாழ்வு அறம் சார்ந்தது. சான்றோர்கள் இல்லறமே நல்லறம் என்றனர். மூலமுதலாகிய சிவபெருமானை வழிபடும் தொண்டர்கள் பலர் இக்கூற்றினைப் பின்பற்றலாயினார். பெரியபுராணத்தில் இல்லறத்தில் இருந்து இறைத்தொண்டாகிய சமுதாயத் தொண்டாற்றிய நாயன்மார்கள் பலர் உள்ளனர். அந்நாயன்மார்களின் வாழ்வியலை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## இல்லறத்திலிருந்து நல்லறம் போற்றியவர்கள்

பெரியபுராணத்தில் இல்லறவாழ்வோடு இறைத் தொண்டாற்றிய நாயன்மார்கள் இருபத்து மூன்றுபேர்கள். அப்பூதியடிகள், அமர்நீதிநாயனார், அரிவாட்டாயர், இசைஞானியார், இயற்பகையார், இளையான்குடிமாறர், ஏயர்கோன் கலிக்காமர், கலிக்கம்பர், கலியர், கழற்சிங்கர், குங்கிலயக்கலயர், கோட்புலி, சடையர், சிறுதொண்டர், சுந்தரர், திருநீலகண்டர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர், நமிநந்தி, நின்றசீர் நெடுமாறன், புனிதவதியார், மானக்கஞ்சாறர், மெய்பொருளனார் ஆகிய இருபத்து மூன்று பேர்கள் இல்லற நெறிநின்று இறைப் பணியைச் செய்தவர்கள். திருஞானசம்பந்த பெருமானுக்கு திருமணம் நடைபெற்றாலும் இல்லறவாழ்வில் ஈடுபடாமல் திருமணத்தின் போதே இறைவனோடு கலந்து விட்டார்.

## இல்லறத்தின் மேன்மை

அன்பும் அறனும் உடையவர்களது வாழ்க்கைத் தேவர்களும் போற்றக்கூடிய வாழ்வாக அமையும் என்பதை

"அன்பின் வென்ற தொண்டரவர்க்(கு) அமைந்த மனைவியார்

முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்

என்பும் மனமும் கரைந்துருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்

பின்பு பரமர் தகுதியினாற் பெரியாரவருக் கருள்புரிவார்"

என்னும் சிறுதொண்டர் புராணம் நமக்கு உணர்த்துகிறது (Arumuka Navalar, 1997). ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்தல் அறம். அறவாழ்க்கையில் அன்பினை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டும், எந்த இடையூறுவரினும் திடமான பக்தியினால் இறைவனை அடைவதையும் முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். அரிவாட்டநாயனாரின் வரலாற்றைக் கூறும் சேக்கிழார்,

"அக்குலப்பதி தன்னில் அறநெறித்

தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்"

என்று எடுத்துரைக்கின்றார் (Arumuka Navalar, 1997).

## கற்பெனப்படுவது சொற்றிறம்பாவை

பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் வாழ்ந்த பல பெண்டிர் தம் கணவர் கூறிய சொல்லை மறுக்காமல் வாழந்து வந்தனர். மங்கையர்கரசியார் போன்றோர் தனது கொள்கை சரியன்று எனத் தெரிந்தும், அதை ஏற்காததுடன் தம் கொள்கைக்கே தம் கணவரை மாற்றியும் உள்ளனர்.

இயற்பகையாரின் துணைவியாரைச் சிவனடியார் கேட்டார். இயற்பகையார் மறுக்காமல் மனைவியை அளித்தார். இயற்பகையார் சிவனடியார் மீது கொண்டுள்ள பற்றினால் மனைவியைக் கொடுத்தார். இது இயற்கைக்கு மாறுபட்ட செயல் எனினும் அவர் துணைவியார் மனங்கோணாமல் கணவன் இட்ட கட்டளையை நிறைவேற்றினார். அம்மையார் தன் கணவன் மீது கொண்ட பக்தியும், இறைத்தொண்டிற்கு இடையூறு நேர்ந்துவிடக்கூடாது என்பதுமே இதற்குக் காரணமாகின்றது.

'இன்றுனை இம்மெய்த்தவர்க்குக் கொடுத்தனன்'

என்று கணவன் கூறியதும் துணைவியார் மனமுவந்து

"இன்று நீரெனக் கருள் செய்த திதுவேல் என்னுயிர் கொடுநாத!

நீர் உரைத்த, ஒன்றை நான்செயும் அத்தனை யல்லால் உரிமை வேறுள"

என்று கூறி சிவனடியாருடன் சென்றார் (Arumuka Navalar, 1997). கணவரின் சொற்களை ஏற்று நடந்தமையால் அவர் கற்பு நெறி வழுவாத தன்மையுடையவர் என்று பெரியபுராணம் எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் பெண்டீர் கணவன் விருப்பமே தன்னுடைய விருப்பமெனக் கருதி வாழ்ந்தனர் என்பதையும் கணவன் சொல்லுக்கு மதிப்பளித்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.

## கருத்தொருமித்த இல்வாழ்க்கை

பரஞ்சோதியார் சிவனடியாருக்குத் தொண்டு செய்வதை விரும்பிச் செய்து வந்தார். பரஞ்சோதியாரை சோதிக்க விரும்பிய இறைவன் கபால பைரவர் வடிவில் அவர் இல்லத்திற்குச் சென்றார். பரஞ்சோதியாரிடம் இறைவன் பிள்ளைக்கறி வேண்டுமென்றார். குடும்பத்தில் மூத்த ஆண் பிள்ளையினுடையதாக அவ்விறைச்சி இருக்கவேண்டும் என்ற நிபந்தனையும் இட்டார். மனம் குழம்பிய பரஞ்சோதியாருக்கு அவரது மனைவி துணைநின்றார். தன் மகன் சீராளனையே அரிந்து சமைக்கலாம்

என்று அவருடைய மனைவி கூற மகனை பள்ளியில் இருந்து அழைத்து வந்தார். தாய் தனது மகனைப் பிடித்துக்கொள்ளத் தந்தை குழந்தையை அரிந்தார். கணவன், மனைவி இருவரும் மனம் ஒத்த நிலையில் இச்செயலைச் செய்ததை

“ஒன்று மனத்தார் இருவர்களும் ‘உலகர் அறியார்’ என மறைவில்

சென்று புக்குப் பிள்ளைதனைப் பெற்ற தாயார் செழுங்கமலங்கள்

நன்று கழுவிக் கொடுசெல்ல மகனை எடுத்துலகை

வென்ற தாதை யார்தலையைப் பிடிக்க விரைந்து மெய்த்தாயர்”

என்கிறார் சேக்கிழார் (Arumuka Navalar, 1997). அவர்களது குழந்தையும் தாய், தந்தையர் கூறிய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தன்னைக் கறிசமைக்க ஒத்துக் கொண்டது. குழந்தையின் பெற்றோருக்குப் பணிந்து நடக்கும் நிலைமையும், மனைவி தன் கணவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த நிலையையும் பெரியபுராணம் காட்டும் இல்லறத்தில் அறிய முடிகின்றது (Kamatchi, 1993).

கணவனுக்காகத் தன்னையும், குழந்தைகளையும் இறைத் தொண்டிற்காக அர்ப்பணித்ததை காணமுடிகின்றது. அமர்நீதிநாயனார் பழையாறை என்னும் ஊரில் அடியவர்களுக்கு வேண்டிய தொண்டுகளையும் அவர்களுக்கு நல்ல கோவணங்களையும் கொடுத்து உபசரித்து வந்தார். ஒருநாள் இறைவன் அடியார் உருவில் வந்து தனது இரண்டு கோவணங்களில் ஒன்றை பத்திரமாக வைத்திருக்கும்படிக் கூறிச் சென்றார். இறைவனது திருவிளையாடலால் கோவணம் காணாமல் போனது மீண்டும் இறையடியவர் வந்து அந்த கோவணத்தைக் கேட்டபோது அதைக் காணாமல் அமர்நீதிநாயனார் தவித்தார். அடியாரின் கோவணத்திற்கு ஈடாகப் பொருள் தருவதாகக் கூறினார். அதற்கு இறையடியார் ஒத்துக்கொள்ளத் தராசுத் தட்டில் கோவணம் வைக்கப்பட்டது. தராசின் மறுபுறத்தில் அமர்நீதிநாயனார் தன் செல்வத்தை எல்லாம் ஏற்றினார். தராசு சமமாகவில்லை. இறுதியாக நாயனாரும் அவர் மனைவியும், குழந்தைகளும் தராசுத்தட்டில் ஏறி அமர்ந்த நிலையில் தராசு சமமானது. அமர்நீதியாரின் குடும்பத்திற்கு இறையருள் கிட்டியது. இன்பத்திலும், துன்பத்திலும் உடன் நின்று உதவும் குடும்ப அமைப்பினை இங்கு காணமுடிகின்றது.

## மனையறத்தின் வேர்

குடும்பத்திற்கு அச்சாணியாகத் திகழ்பவள் பெண். குடும்பம் என்ற விருட்சம் தழைப்பதற்குத் தன்னை மறைத்துக்கொண்டு கணவனின் உயர்வுக்காக வாழும் மனையறத்தின் வேராகத் திகழ்கிறாள். கணவனுக்கு ஆலோசனை கூறுவதில் மந்திரியாக விளங்குகிறாள். இளையான்குடிமாறர் அடியவர்களுக்கு அமுது படைக்கும் திருத்தொண்டை செய்து வந்தார். வறுமை வந்துள்ள போதும் தனது சிவத்தொண்டினைக் குறைவின்றி செய்து வந்தார். ஒருநாள் இரவுப்பொழுது மாரிக்காலம் இறைவன் அடியவனாக இளையான் குடிமாறனாரின் வீட்டிற்கு வந்தார் வந்தவர்க்கு அமுது படைக்க வீட்டில் ஒன்றுமில்லை. அந்நிலையில் அவர் மனைவி,

“செல்லனீங்கப் பகல்வித் தியசெந்நெல்

மல்லநீர் முளை வாரிக்கொடு வந்தால்

வல்ல வாறு அமுதாக்கலுமாகு மற்

றல்ல தொன்றறியேன்”

என்றார் (Arumuka Navalar, 1997). அதனைக் கேட்ட இளையான்குடிமாறர் ‘ஈரநெல் முளைகளை வாரிக்கொண்டு வந்து மனைவியாரிடம் கொடுத்தார். அவரும் அதை வாங்கி இன்னடிசிலாக்கி அடியார்க்கு அமுதூட்டினார். கணவன் மனைவி இருவருக்கும் இறையருள் கிட்டியது.

‘நாவுக்கரசருக்கு அமுது படைத்த அப்பூதியடிகளின் மனைவி மகனை அரவு தீண்டப்பட்டு இறந்து கிடக்கும் நிலையிலும், சிவனடியாருக்கு அமுது படைத்துத் தன் கணவனாருடன் அருந்தொண்டில் ஈடுபட்டார்.

கணவன் பிற மாதரை நாடிச்சென்று விட்டுத் திரும்பி வந்தபோது என்னைத் தொடாதீர்; என்று பொருள்புலப்படுமாறு ‘தீண்டுவீர் ஆயின் எம்மைத் திருநீலகண்டம்’ என்று தடுத்து நிறுத்தினார். திருநீலகண்ட நாயனாரின் மனைவி நீண்டகாலமாக அகத்திலும், புறத்திலும் தனித்தே வாழ்ந்து தன் கணவனுக்குப் புத்தி புகட்டியதோடு, இது போன்ற தன்மை கொண்ட ஆடவர்க்கு எச்சரிக்கையாக அமைகின்றார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழத் துணையானவர்கள் மனையறத்தின் வேராக உள்ள பெண்கள். மரத்தின் இலையையும், பூவையும் பார்ப்பவர்கள் மரத்தின் வேரைப் பார்ப்பதில்லை. ஆனால் மரம் தழைக்கவும், பூக்கவும் காய்க்கவும், பழுக்கவும் ஏன் மரம் வாழவும் அதன் வேரே காரணமாக அமைகின்றது.

## விருந்தோம்பல்

பெரியபுராணம் காட்டும் குடும்ப அமைப்பில் விருந்தோம்பலும் சிவத்தொண்டு செய்தலுமே தலையாயதானதாகக் காட்டப்படுகிறது.

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்”

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தன் செல்வத்தையெல்லாம் விற்றும், தன் பிள்ளையை கறி சமைத்தும், வறுமையிலும் விருந்தோம்பலுக்கு இடையூறு ஏற்படாமல் செய்தனர் என்பதை பெரியபுராணம் உணர்த்துகின்றது (Arumuka Navalar, 1997; Ilampuranar, 2008; Sasireha, 2021).

கணவன் இறந்த நிலையிலும் விருந்தோம்பல் கைவிடாத மங்கையர் வாழ்ந்த நிலை பெரியபுராணத்தில் சுட்டப்படுகின்றது. சுந்தரர் தம் மனைவியார் பரவையாரின் ஊடலைத் தீர்க்கச் சிவபெருமானைத் தூதனுப்பிய செய்தி கேட்டு ஏயர்க்கோன் கலிக்காமர் சுந்தரரை வெறுத்தார். இருவரையும் ஒன்று சேர்க்க இறைவன் விரும்பினார். கலிக்காமரின் வயிற்று வலி சுந்தரரால் தீரும் என இறைவன் கூறினார். சுந்தரரால் நோய் தீருவதை விட இறப்பதே மேல் என வாளால் வயிற்றில் குத்தி இறந்து விட்டார். அவரைக் காண வந்தார் சுந்தரர். கலிக்காமரின் துணைவியார் கணவன் இறந்ததை மறைத்துச் சுந்தரரை சிறப்பாக வரவேற்று விருந்தோம்பல் செய்தார். அடியவரை வரவேற்று விருந்தோம்பல் செய்யாதக் குற்றம் தனது கணவரைச் சார்ந்துவிடக் கூடாது என்று எண்ணி உபசரித்தார். விருந்தோம்பல் தடைபடாது நிகழ்த்தியதை பெரியபுராணம் உணர்த்துகிறது.

காரைக்காலம்மையார் தன் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகள் இரண்டில் ஒன்றை அடியவர்க்கு விருந்தாக படைத்தார். அடியவர்க்கு அமுது படைத்தலையே சிறந்த தொண்டாகக் கருதி வாழந்தவர் காரைக்காலம்மையார்.

## முடிவுரை

பெரியபுராணம் தில்லையில் வாழ்ந்த அந்தணர்கள், உலகம் போற்றும் தன்மானத்தையும், பொறுமையையும் கொண்டு இல்வாழ்க்கையில் வழுவாமல் வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றது. பெரியபுராணம் காட்டும் குடும்ப அமைப்பில் இறைவனிடம் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இறை அடியவர்களுக்குத் தொண்டு செய்கின்றனர். அவர்கள் உண்டபின் தான் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். தமிழரின் தலையாய மாண்பான விருந்தோம்பல் பெரியபுராணத்தில் முதன்மையாகப் போற்றப்படுகிறது. இல்லற வாழ்வில் ஈடுபட்ட மனிதனே வாழ்வில் முழுமை அடைகின்றான். நாயன்மார்கள் இல்லற வாழ்வில் இருந்து கொண்டு இறைத் தொண்டினை வழுவாது செய்து வந்ததை

பெரியபுராணம் உணர்த்துகிறது. சிவத்தொண்டில் குடும்பமாக ஒருமித்து தங்களை அர்ப்பணித்துக் கொண்டத் தன்மையை பெரியபுராணத்தின் வழி அறிய முடிகிறது.

## References


Arumuka Navalar, (1997) Periyapuranam, Sri Arumuga Navalar. Saiva Prakasa Vidyasalai, Chidambaram, India.

Ilampuranar, (2008) Thirukural, Saradha pathippagam, Chennai, India.

Kamatchi, P., (1993) Periyapuranam kattum samuganilai, Rathna Pathippagam, Dindigul, India.

Sasireha, P., (2021) Religious work of the Nayanmars who volunteered for the sacred offering of Food, International Research Journal of Tamil, 3(2), 78-86. https://doi.org/10.34256/irjt21211


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License